*3*

# தேவன் குற்றம்சாட்டப்படுபவராய் இருக்கின்றாரா?

## (யோபு 13; 14; 16; 17; 19; 21)

*வயது முதிர்ந்த பெண் ஒருத்தி, தனது வீட்டின் முன்புற முற்றத்தில் சக்கரநாற்காலியில் உட்கார்ந்திருக்கையில், வீடுகள்தோறும் செல்லுகின்ற ஒரு இளைஞன் அவளிடத்தில் நடந்து வந்தான். அவன் கல்லூரியில் படிப்பதற்குப் பொருள் ஈட்டுவதற்காக வேதாகமங்களை விற்கின்றான் என்பது தெரிந்ததும், அவள் தேவனை சபித்து, ஆகாயத்தில் துப்பி, தான் தேவனுடைய முகத்தில் அதுபோல் துப்புவதற்கு விரும்புவதாகக் கூறினாள்.*

*இந்தப் பெண் தனது வாழ்வைத் தேவன் கெடுத்துவிட்டார் என்று பழிசுமத்தினாள். அவளது பிந்திய இளம்பருவத்தில், அவளும் அவளது எதிர்காலக் கணவனும் மற்றும் இன்னொரு தம்பதியும் இருந்த கார் ஒரு புகைவண்டித் தடத்தில் அகப்பட்டுக்கொண்டது. அந்தக் கார் புறப்பட்டுச் செல்வதற்குமுன்பாக அங்கு வந்த புகைவண்டியொன்று அந்தக் காரை இடித்துவிட்டது. அந்த விபத்தில் அவளது எதிர்காலக் கணவனும், மற்ற தம்பதியும் கொல்லப்பட்டிருந்தனர்; அவள் தனது இடுப்புக்குக் கீழே உணர்வற்ற நிலையை அடைந்தாள். அதுமுதற்கொண்டு அவள் தனது வாழ்வை ஒரு சக்கரநாற்காலியில் செலவிட்டு வந்தாள், அவளிடத்தில் தேவன் அநியாயமாக நடந்துகொண்டார் என்று அவள் நம்பியதால் அவள் அதிகம் அதிகமாய்க் கசப்புணர்வு கொண்டவளானாள். ஒவ்வொருநாளும் அவள் மரிக்க விரும்பினாள். யோபுவைப்போல் அவளும், தேவன் தன்னை உயிர்வாழ அனுமதித்திருப்பது ஏன் என்று புரிந்து கொள்வதில் சிரமப்பட்டாள். தேவன் இரக்கமுள்ளவரென்றால், அவர் மற்றவர்களுடன் தன்னை மரிக்க அனுமதித்திருப்பாரே என்று அவளுக்குக் காணப்பட்டது. அவள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக தண்டிக்கப்பட்டது ஏன் என்று அவள் வியப்படைந்தாள்.*

*இந்தப் பெண் துன்புற்றது போன்ற பிரச்சனையில் நாம் தாக்குப்பிடித்து நிற்பதற்கு, யோபுவின் அனுபவம் நமக்கு உதவுகிறது. யோபு 13ல் நாம், யோபு தமது பிரச்சனையினூடே நினைப்பதற்குப் போராடியதைக் காண்கின்றோம், மற்றும் நாம் அவரது சலிப்பைப் புரிந்துகொண்டு அவருடன் பரிதபிக்க முடியும்.*

## தேவனுக்கு முன்பாக யோபுவின் வழக்கு

*யோபுவின் நண்பர்கள் உதவிசெய்திருந்ததில்லை (12:2; 13:2, 4, 5; 16:2-4; 19:2-5). அவர் ஏதோ தவறு செய்திருக்க வேண்டும், ஆனால் அது என்ன என்று தங்களால் அவருக்குக் கூற முடியவில்லை என்று அவர்கள் அவரிடம் கூறினார்கள். அவர்கள் நல்லதையே நினைத்தனர், ஆனால் அவர்கள் புரிந்துகொள்ளுதலில் குறைவுள்ளவர்களாய் இருந்தனர். அவர்கள் தங்களின் உட்கண்ணோக்கத்தை மிதமிஞ்சி மதிப்பிட்டு, அவர்கள் தேவனைப் பற்றித் தாங்கள் அறிந்திருந்ததை விட அதிகமாக அறிந்திருந் ததாக நினைத்தனர். வாழ்க்கையைத் தேவன் கண்ணோக்குகின்ற விதத்தில் அவர்களால் கண்ணோக்க முடியவில்லை. என்ன நடந்து கொண்டிருந்தது என்பதற்கு அவர்கள் "பூமிக்குரிய" விளக்கத்திற்கும் சற்றே அதிகமானதை மாத்திரம் கொண்டிருந்தனர். அவர்கள் கடந்தகால அனுபவத்தைப் பற்றியும் தங்கள் வாழ்வில் தாங்கள் கவனித்திருந்தவற்றைப் பற்றியும் பேசினர். அவர்கள் கடந்த காலத்தின் பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு மனித வரலாற்றை எடுத்துரைத்தனர் (8:8).*

*யோபுவும்கூட தமது சொந்த அனுபவத்தை நம்பியிருக்க வேண்டியிருந் தது, ஆனால் துன்மார்க்கரான மனிதர்கள் செழிப்பதையும் முதிர்வயதுவரை வாழ்வதையும் அவர் கண்டார். அவர்கள் கணிசமான செல்வாக்குடைய மனிதர்களாய் இருந்தனர் மற்றும் ஏராளமான குழந்தைகள் என்ற ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தனர். தேவன் அவர்களைச் சிட்சிக்கவில்லை. அவர்களின் கால்நடைகள் பலுகிப்பெருகின. அவர்கள் தங்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சியை அனுபவித்தனர். அவர்கள் செல்வத்தில் தங்கள் நாட்களைச் செலவிட்டு, துன்புறுதல் எதுவுமின்றித் திடீரென்று இறந்துபோயினர் (21:7-13). துன்மார்க்கர் தேவனைத் தூஷிப்பதைக்கூட அவர் கண்டார். செழிப்படைந்தவர்கள் அவரை சேவிப்பதில் பயன் எதையும் காணவில்லை. அவர்கள் தங்கள் நம்பிக்கைகளை மறைத்துவைக்க முயற்சி செய்யவில்லை (21:14, 15). இது யோபுவுக்குக் குழப்பமாயிருந்தது.*

*மனித வரலாறு தேவனுடைய சிந்தையை வெளிப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. நம்மை வழிநடத்துவதற்கு நாம் வாழ்வின் அனு பவங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை மாத்திரம் கொண்டிருந் தால், நாம் இருளில் தடுமாறும் இடத்தை அடைந்திருப்போம். வாழ்வின் போராட்டங்களில் பலவற்றிற்கு தேவனுடைய வழிநடத்துதல் இன்றி நம்மால் பதில்களைக் கண்டறிய இயலாது. அதனால் தான் யோபு தமது வழக்கைத் தேவனிடம் எடுத்துச் செல்ல விரும்பினார். அவர், தமது நண்பர்கள் தேவனுடைய வாயில் வார்த்தைகளை வெறுமனே இட்டார்களே தவிர தேவனுடைய விஷயத்தை மிகச்சரியாக முன்நிறுத்த வில்லை என்று அவர் நம்பினார்.*

# யோபுவின் குழப்பமும் தன்னிரக்கமும்

*யோபு ஒரு சுருக்கமான, இடர்ப்பாடான வாழ்வுக்காலத்தின் அநீதியில் தங்கியிருந்தார் (14:1-4). "... மனுஷன், ... வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்" என்று அவர் புலம்பினார். அதில் அவரால் நியாயத்தைக் காண இயலவில்லை. அவர், "பூமியில் மனிதன் இவ்வளவு குறுகிய காலமே வாழ நியமிக்கப்பட்டிருந்தால், அவனைத் தேவன் ஏன் தனியாக விட்டு அவனுக்கு இளைப்பாறுதலைத் தருவது இல்லை?" என்று வியப்படைந்தார். அந்த வேளையில், அவர் இந்த வாழ்விற்குப் பின்பு மனிதனுக்கு ஒரு தொடர்ந்த வாழ்வு உண்டு என்பது பற்றி ஒருசிறிதே கருத்துக் கொண்டிருந்தார் அல்லது அவ்விதமான கருத்து எதுவும் அவரிடத்தில் இருக்கவில்லை. அவர், "அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான். நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்" என்று கூறினார் (14:2).*

*யோபு தமது பெருந்துக்கத்தில், மரணத்திற்குப் பின்பு ஒரு மனிதன் வாழ்வதில் தாம் கண்டிருந்ததைக் காட்டிலும் அதிகமான நம்பிக்கையை, வெட்டிவீழ்த்தப்பட்ட பின்பும் மீண்டும் முளைக்கிற மரத்தில் கண்டார். மீண்டுமாக, அவர் (தம்மில் இருந்து) வெளியே எடுத்துக் கொடுப்பதற்குப் பூமிக்குரிய அனுபவங்களை மாத்திரம் பெற்றிருந்தார். அவர் மரத்தின் அடிப்பகுதியில் இருந்து தளிர்கள் முளைத்து எழுவதைக் கண்டிருந்தார், ஆனால் அவர் மரித்தோரில் இருந்து ஒரு மனிதர் உயிர்த்தெழுந்து வந்ததை ஒருக்காலும் கண்டதில்லை. அவர் பின்வருமாறு கூறினார்:*

> *மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறதுபோல, மனுஷன் படுத்துக் கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை (14:10-12).*

*யோபு, கிறிஸ்துவுக்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் முன்னதாக வாழ்ந்தார், எனவே அவர் இன்றைய நாட்களில் நாம் கொண்டுள்ளதுபோல் உயிரித்தெழுதல் பற்றிய அதே நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.*

*உண்மையில் யோபு, மறுபடி வாழுதல் என்பது தனது தற்போதய சூழ்நிலையை விட அதிகமானது எதையும் தராது என்றால், மறுபடி வாழ விரும்பாதவராகவே இருந்தார். அவர் தன்னிரக்கத்தில் புரண்டு கொண்டிருந்தார். நாம் நம்மைக்குறித்து இவ்விதமான இரக்கத்தை உணரும்போது, நாம் நமது கவனக்குவிப்பை இழந்துவிடுகின்றோம். இருப்பினும், 14:13ல் யோபு பின்வருமாறு கூறுகையில் அது ஒரு விருப் பத்தை அறிமுகப்படுத்துவதாகக் காணப்படுகிறது:*

> *நீர் என்னைப் பாதாளத்தில் ஒழித்து,*
> *உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து,*
> *என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு*
> *எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்!*

தேவனுடைய கோபம் கடந்துபோகும் வரைக்கும், யோபு, தாம் ஏதோ ஒரு வகையில் பாதாளத்தில் - மரித்தவர்களின் நிலையில் - ஒளித்துவைக்கப்பட வேண்டும் என்றும், அதன்பின்பு தமது உயிரை மீண்டுமாகத் திருப்புவதற்குத் தேவன் ஒரு காலத்தை நியமிக்க வேண்டும் என்றும் விரும்பினார். அவர், "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" என்ற கேள்வியை முன்வைத்தார் (14:14). வசனம் 7 முதல் 12 வரையுள்ள பகுதியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டபடி, அவர் நிச்சயமானவராக இருக்கவில்லை. ஆயினும், அப்படிப்பட்டது சாத்தியமென்றால், அவர் அந்த வேளை வரும்வரைக்கும் தமது வாழ்வின் கடினமான சூழ்நிலைகளைச் சகித்துக் காத்திருக்கலாமே.

யோபு, தம்மீது தேவன் மிகவும் கடினமாய் இருந்தார் என்று நினைத்தார் (14:16-19). தமக்குத் தேவன், வாழ்வின் மேடையைக் கடப்பதற்கு ஒருசில படிகள் மாத்திரமே கொடுத்துவிட்டு, தனது தவறுகளைக் கண்டுபிடிப்பதற்குத் தனது அசைவுகள் ஒவ்வொன்றையும் அவர் கவனித்தார் என்று கூறினார். பாறையில் இருந்து மண்ணானது அரிக்கப்பட்டு மலையிலிருந்து வீழ்ந்தோடும் தண்ணீரால் மணலாக மாற்றப் படுவதுபோல், சந்தோஷமான வாழ்விற்கான அவரது நம்பிக்கை தகர்ந்து போயிற்று. தேவன் தமக்கு (யோபுவுக்கு) எதிராக நின்று தம்மை காலத்திற்கு முந்தியே முதிர்வயதும் சுருக்கமும் உடையவராக்கியதாக அவர் நம்பினார். அவர் தம்மை கீழ்நோக்கி வழிநடத்தி தமது விரோதிகளிடத்தில் தம்மைத் திருப்பிவிட்டதாகத் தேவனைக் குற்றம்சாட்டினார் (16:7-14). அவர், தம்மைத் தேவன் வெறுத்ததாக நினைத்தார், அது ஏன் என்று அறியாதிருந் தார், ஏனென்றால் அவர் அநியாயமானவராக இருந்ததில்லை (16:17). அவர் தம்மைத் தேவனுக்கு முன்பாகத் தூய்மையானவராகக் கண்டார், அது அவருக்கு நேர்ந்த சோதனைகளைப் புரிந்துகொள்ளுதல் என்பதை அதிகக் கடினமாக்கிற்று.

யோபுவின் நண்பர்களும் குடும்பத்தாரும் அவரது விரோதிகள் போல் செயல்பட்டுகொண்டிருக்க (16:1-6, 20; 17:2-5; 19:2-5, 13-19), அவர் தமக்காக வருத்தப்பட்டார். அவர்களும் அவரும் தங்கள் இடங்களில் ஒருவருக்கொருவர் மாற்றப்பட்ட நிலையில் இருந்தால், அவர் தமது நண்பர்கள் தமக்குக் கொண்டுவந்ததைப் பார்க்கிலும் அதிகமான ஆறுதலைத் தாம் அவர்களுக்குத் தரமுடியும் என்பதில் அவர் உறுதியாய் இருந்தார். அவர்களுக்கு எதிராக அவர் இவ்வளவு தைரியமாய்ப் பேசமாட்டார். அவர்களுக்கு எதிராக அவர் வார்த்தைகளைக் குவித்து அவர்களுக்கு எதிராகத் தமது தலையை உலுக்கியிருக்க மாட்டார். அவர்களின் துக்கத்தைக் குறைப்பதற்குச் சிலவற்றைக் கூறுவதை அவர் கண்டறிந்திருப்பார்.

அவரது நண்பர்கள் அவரைப் பழித்துரைத்தனர், அவரது சகோதரர்கள் அவரை விட்டுச் சென்றிருந்தனர், அவரது சிநேகிதர்கள் அவரைக் கைவிட்டிருந்தனர், அவரது வீட்டு வேலைக்காரர்கள் அவரை ஒரு அந்நியன்போல் நடத்தினர், அவரது மனைவி அவரைப் புறக்கணித்தாள், சிறுபிள்ளைகள் கூட அவரை நிந்தித்தனர். ஒருகாலத்தில் அவர்மீது

*அன்புகொண்டிருந்த ஒவ்வொருவரும் அவருக்கு எதிராக நின்றதாகத் தோன்றியது.*

*யோபு மரிப்பதற்கு மாத்திரமே திட்டமிட்டார் (17:1, 11-16). கல்லறை ஒன்றுதான் அவரது துன்பத்திலிருந்து அவரை விடுவிப்பதாக இருந்தது. (துன்பத்தில் இருந்து) மீள்வதற்கான நம்பிக்கை எதையும் அவர் காணவில்லை. அவர் அதைத் தம்மைவிட்டு நீக்கிப்போட விரும்பினார். அவர் உயிர்வாழ்வதற்குக் காரணம் எதையும் இனியும் காணவில்லை. யோபு "அழிவைப்பார்த்து, 'நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்'; புழுக்களைப் பார்த்து, நீங்கள் 'எனக்குத் தாயும் எனக்குச் சகோதரியும்' என்கிறேன்; என் நம்பிக்கை இப்போது எங்கே?" என்று கூறியபோது (17:14, 15அ), கல்லறையானது வரவேற்கும் புகலிடம்போல் காணப்பட்டது.*

## தேவன்மீது யோபுவின் குற்றச்சாட்டு

*முதலில் யோபு தேவனை மதியீனமாகக் குற்றம் சாட்டவில்லை: "இவை எல்லாவற்றிலும் பாவஞ்செய்யவுமில்லை தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை" (1:22). அவர் தமது மனைவியினிடத்தில், "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ?" என்று கேட்டார் (2:10ஆ). பிற்பாடு அவர், "என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது. என் பேரில் பற்கடிக்கிறான். என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்" என்று கூறியதில் (16:9), தேவன் தம்மைக் கிழித்துப்போட்டதாகவும் தமது விரோதியாகி இருந்ததாகவும் குற்றம்சாட்டினார்.*

*யோபு தமது நிலையைப்பற்றிக் கூறிய ஒவ்வொன்றும் உண்மையாக இருந்தது. அந்த விஷயங்கள் யாவும் நடக்கும்படித் தேவன் அவற்றை அனுமதித்திருந்தார். அதற்குபின்னால் இருந்த நோக்கத்தை யோபு அறிந்திருக்கவில்லை, ஆனால் அவர் தமக்கு நடக்காத ஏதொன்றைக் குறித்தும் தேவனைக் குற்றம் சாட்டவில்லை. அவர் தம்மிடத்தில் தேவன் நடந்துகொண்ட விதம்பற்றிய அவரது நியாயத்தைக் கேள்விகேட்டார், இது அவர் தேவன்மீது நம்பிக்கை இழந்ததால் அல்ல, ஆனால் அவர் தாம் புரிந்துகொள்ளக்கூடிய விளக்கத்தை விரும்பினார். யோபு தமது சுய இரக்கத்தில், தேவன் தமது விரோதியாக இருந்தார் என்று குற்றம்சாட்டும் அளவுக்கு தேவனை நியாயந்தீர்க்க நெருங்கி வந்திருந்தார் (19:11).*

*எரேமியா இதைபோன்ற உணர்வுகளைக் கொண்டிருந்தார். அவர், "கர்த்தாவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன், ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?" (எரே. 12:1). ஆபகூக் தேவனுடைய பரிசுத்தத்தையும் வல்லமையையும் ஒப்புக்கொண்டார் (ஆப. 1:12, 13), மற்றும் அவர் தமது சொந்த மக்களைக் காட்டிலும் துன்மார்க்கராய் இருந்த மக்களை, தமது சொந்த மக்களுக்குச் சிட்சையளிக்க அனுமதித்தது எவ்வாறு என்று அறிய விரும்பினார். இந்த*

*மனிதர்கள் தேவனைக் குற்றம் சாட்டவில்லை அல்லது அநீதிசெய்தார் என்று பழிசுமத்தவில்லை; என்ன நடந்தது என்று அவர் விளக்கப்படுத்த வேண்டும் என்று மாத்திரம் இவர்கள் விரும்பினர்.*

*யோபு தேவனிடத்தில் கேள்வி கேட்டார், ஆனால் அவரைச் சந்தேகிக்கவில்லை. இதில் ஒரு வித்தியாசம் உள்ளது. யோபு கண்ட வகையில், தேவன் தாம் விரும்பிய எதையும் தம்மிடம் (யோபுவிடம்) செய்வதற்கு உரிமை கொண்டிருந்தார், ஆனால் அது ஏன் என்று அறியவே யோபு விரும்பினார்.*

*அவர் இன்னமும் தேவனை மதித்து அவரது மகத்துவத்தைப் பாராட்டினார். அவர் தம்மைவிடத் தேவன் பெரியவராயிருப்பதை ஒப்புக்கொண்டார் (9:1-12; 10:4-12). 13:20, 21ல் அவர் தேவனிடத்தில் இரண்டு வேண்டுகோள்களை விடுத்தார்: (1) தேவன் தமது கையை யோபுவை விட்டுத் தூரப்படுத்த வேண்டும், (2) தேவன் தம்முடைய பிரசன்னத்தினால் யோபுவைக் கலங்கப்பண்ணக் கூடாது.*

*யோபு தேவனுக்கு முன்பாக ஒரு விசாரணையை விரும்பினார். அவர்(யோபு) இவ்வாறு நடத்தப்பட்டது ஏன் என்று அறிவதற்கு அவர் விரும்பினார் (13:18). தேவனில் தமது இரட்சிப்பு இருந்தது என்பதை அவர் இன்னமும் நம்பினார் (13:16).*

*யோபு கொடுமையாக நடத்தப்படுவதைத் தேவன் அனுமதித்திருந்தார். யோபுவின் கண்ணோக்கில், அவரைத் தேவன் தூக்கியெறிந்து, ஓரம்கட்டி, அவரது மகிமையை உரிந்துபோட்டிருந்தார். இது ஏன் நடைபெற்றது என்று அறிந்தால் அவர் இதைச் சகித்திருக்கக்கூடும் (19:7-9).*

## *முடிவுரை*

*யோபுவைப் பற்றிய இந்தப் படிப்பில் இருந்து பல முடிவுகளைப் பெறமுடியும்.*

*முதலாவது, சொத்து என்பது தெய்வீக அங்கீகாரத்தின் அடையாளமாக இருப்பதில்லை, அல்லது இடுக்கண் என்பது தெய்வீக மறுதலிப்பின் அடையாளமாகவும் இருப்பதில்லை (21:7-26). எவரொருவரும் துன்புறலாம் அல்லது வளம்பெறலாம் என்ற உண்மையானது தேவனுடைய இயற்கையான விதிகளின் சார்புத்தன்மைக்குச் சான்றாக உள்ளது.*

*இரண்டாவது, நியாயம் என்பது இப்போது உறுதியாகத் தோன்றாவிட்டாலும், ஏதோ ஒரு நாளில் கணக்கு ஒப்புவித்தலைக் கேட்கிறது. துன்மார்க்கர் நீதிமான்களைக் காட்டிலும் மேன்மையாக இருப்பதாகத் தோன்றினாலும், கடைசியில் அவர்கள் தேவனுடைய நியாயத்தைச் சந்திப்பார்கள் என்று யோபு முடிவுசெய்தார் (21:17-30). தேவன் இந்த வாழ்க்கையிலேயே எல்லாக் கணக்குகளையும் முடிப்பதில்லை. அவர் அவற்றை எவ்வாறு நேராக்குவது என்று அறிந்திருக்கின்றார் - எனவே கணக்குகளைத் தீர்ப்பது பற்றிய அக்கறை கொள்வதற்கு அவரில் நம்பிக்கையாய் இருங்கள் (ரோம. 12:17-21). துன்மார்க்கர் மனந்திரும்பித் தேவனிடத்தில் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையிலேயே தேவன் நீடியபொறுமையுள்ளவராயிருக்கின்றார் (2 பேது. 3:9; எசே. 33:11).*

*மூன்றாவது, மனிதப் பிரச்சனைகள் எல்லாவற்றையும் பூமிக்குரிய அறிவைக்கொண்டு மாத்திரம் தீர்த்து வைக்க முயற்சி செய்கின்றவர்கள், யோபு மற்றும் அவரது நண்பர்கள் ஆகியோரைப் போலவே தடுமாற்றம் அடைவார்கள்.யோபு புரிந்துகொண்டிருக்கவில்லை, மற்றும் தாம் புரிந்து கொண்டிருக்கவில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். அவரது நண்பர் களோ தாங்கள் புரிந்து கொண்டிருந்ததாக நினைத்தனர், ஆனால் அவர்கள் தங்கள் புரிந்துகொள்ளுதலில் இருந்த குறைபாட்டை உணர்ந்தறியாது இருந்தனர். மனித ஞானத்தைக் கொண்டு வாழ்வின் போராட்டங்களைக் கையாள முயற்சிக்கின்ற யாவரும் ஏராளமான பிரச்சனைகளை எதிர்கொள்ளுவார்கள். எரேமியா, "... மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல ... தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல ..." (எரே. 10:23) என்று ஞானமாகக் கூறினார். ஏசாயா, "என் நினைவுகள் உங்கள் நினைவுகள்அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல" என்று கூறியபோது தேவனுக்காகப் பேசினார் (ஏசா. 55:8).*

*நாம் சுமக்கக் கடினமாயிருக்கும் சில இடர்ப்பாடுகள் நடப்பதற்குத் தேவன் அனுமதிக்கின்றார், ஆனால் இது நித்தியமான நன்மையை விளைவிக்கிறது (ரோம. 8:28). நமது வாழ்வைச் சீரழித்துவிட்டு பின்பு தேவனை அதற்காகக் குற்றம் சாட்டக்கூடாது. அவர் நமது ஆத்துமாவை இரட்சிக்கும்படி நாடுகின்றார். தேவன் நித்திய வாழ்வின்மீது கொண்டுள்ள அக்கறையைப் போல் பூமிக்குரிய வாழ்வில் அவ்வளவு அதிக அக்கறை செலுத்துவதில்லை. உடலைக்காட்டிலும் ஆத்துமாவின்மீதே அவர் அதிக அக்கறை கொண்டுள்ளார். மனிதர்கள் என்ற வகையில் நாம், இந்த முன்னு ரிமையைத் திருப்பிப்போடும்படி சாய்கின்றோம்.*

*பார்வையற்றவர்கள் மற்றும் காதுகேட்காதவர்கள் ஆகியோரைப் பற்றிய துயரங்கள் நம்மை அக்கறைப்படச் செய்கின்றன. தேவன் தமது மக்கள்மீது இப்படிப்பட்ட கடினமான விஷயங்களை விழச்செய்வது ஏன் என்று நாம் வியப்படைகின்றோம். பார்வையற்றவர்கள் தங்களுக்குப் போராட்டங்கள் இருப்பினும், சிலவேளைகளில் இரண்டு நல்ல கண்கள் கொண்டுள்ளவர்களைக் காட்டிலும் அதிகமானவற்றைப் பார்க்கின்றனர் என்பதே உண்மையாக உள்ளது. உடல்ரீதியான பார்வைத் தன்மை என்பது உண்மையான மதிப்பீடுகளைக் காணும் திறமையை உத்தரவாதப் படுத்துவதில்லை. காதுகேளாதவர்கள் சிலவேளைகளில், தாங்கள் உடல்ரீதியான கேட்குந்திறனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் ஒருக்காலும் தாங்கள் கண்டறிந்தேயிராமற் போயிருக்கக்கூடிய திறமைகளை மற்ற வழிகளில் மிகவும் மேம்படுத்தியிருக்கின்றனர்.ஒரு திறன் குறைவுபடும் போது அது, மற்ற திறன்களை அடைவதைச் சாத்தியமாக்குகிறது.*

*கடைசியாக, நீதிமான்கள் வெற்றியாளர்களாய் இருப்பார்கள் (17:9). அவர்கள் மேல்நோக்கியும் உயரநோக்கியும் நகருவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பலத்தவர்கள் ஆவார்கள்.*